பேரவையின் முன்னுள்ள கேள்விகள் :—

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு-நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/1969) நிறைவேற்றப்படவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

5. அரசினர் தீர்மானம்

1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சி மன்றங்கள் சட்டத்தின் கீழ் திருத்த வரைவு

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சி மன்றங்கள் " சட்டம் (1920-ம் ஆண்டு சென்னை சட்டம் V) 305-வது பிரிவின் 1-ம் துணைப் பிரிவின் கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் திட்டமிடப்பட்டுள்ள மேற்கூறிய சட்டம் IV—அட்டவணை, 8-வது விதி, (1-A) துணை விதியின் (a) பகுதியின் திருத்த வரைவு ஏற்பளிக்கப்பட வேண்டும்.

வரைவு

1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920-ம் ஆண்டு சென்னை சட்டம் V) 305-வது பிரிவின் (1) துணைப் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்கூறிய சட்டத்தின் IV-வது அட்டவணையிலுள்ள விதிகளில், தமிழ்நாடு ஆளுநர் இதனால் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்கிறார்.

திருத்தம்

"மேற்கூறிய விதிகளில் 8-வது விதி (1-A) துணை விதியின (a) பகுதியில், 'ஆறு அரை ஆண்டுகள்' என்ற சொற்களை நீக்கி, 'ஏழு அரை ஆண்டுகள்' என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 26—பாசனம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,11,07,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. க. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையினர் தயாரித்து அனுப்பியுள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,11,07,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.